




. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL

RNI No : TNTAM/2023/85936



வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!

செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!



www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 19.04.2026 • மலர் 04 • இதழ்: 109 • Edition : Nagercoil • 19.04.2026 • Vol : 04 • Issue : 109 • Page : 4 • Rs. 5/-


### புது வரலாறு படைத்துள்ள

# திமுகவை இந்தியாவே பேசுகிறது

## முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு



சென்னை, ஏப். 19 முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் தளத்தில் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் கூறியிருப்பதாவது:

பரவட்டும் என்று நான் சொன்ன தீ, நாடாளுமன்றம் வரை பற்றியுள்ளது. தொகுதி மறுவரையறை விவகாரத்தில் நண்பர்கள் யார்? துரோகிகள் யார் யார் என்பதை அடையாளம் காட்டியுள்ளது. புது வரலாறு படைத்துள்ள திமுகவை இந்தியாவே உயர்வாக பேசுகிறது.

நமது வெற்றி தொடரட்டும். வெல்வோம் ஒன்றாக! 50, 60 களில் பார்த்த திமுக எது என்று கேட்டவர்களுக்கு நேற்று இது தாண்டா அந்த திமுக என்று காட்டியுள்ளோம். தொகுதி மறுவரையறை என்ற கருப்பு சட்டத்துக்கு எதிரான திமுகவின் போராட்டம் வெற்றி பெற்றுள்ளது" இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

மக்களவையில் நேற்று தொகுதி மறுவரையறை ம சோ தா வை நிறைவேற்றுவது தொடர்பான வாக்கெடுப்பில் மூன்றில் 2 பங்கு பெரும்பான்மைகிடைக்காததால் தொகுதி மறுவரையறை மசோதாதோல்விஅடைந்தது.

இதனை வரவேற்றுள்ள முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் வீடியோவை வெளியிட்டுள்ளார்.

### குமரி மாவட்டத்தில்

# டாரஸ் லாரியால் தொடரும் உயிர் பலிக்கு முடிவு கட்டிய ஆட்சியர்! பொதுமக்கள் மகிழ்ச்சி!

## உயிர் பலியை பொருட்படுத்தாமல் வாழ்வாதாரத்தை முன் வைக்கும் லாரி ஓட்டுநர்கள்

நாகர்கோவில்,ஏப்.19

குமரி மாவட்டத்தில் டாரஸ் லாரிகளால் ஏற்படும் சாலை விபத்தை பொருட்படுத்தாமல் வாழ்வாதாரம் பாதித்து விட்டதாக லாரி உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுநர்கள் ஆட்சியர் அலுவலகத்தில் முற்றுகையிட்ட சம்பவம் குமரி மாவட்ட மக்கள் மற்றும் விபத்தில் சிக்கி உயிரிழப்பு ஏற்பட்டவர்களின் குடும்பத்தார் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

குமரி மாவட்டத்தில் கனிமவளம் ஏற்றிச் செல்லும் டாரஸ் லாரிகளால் ஏற்பட்ட விபத்துகளில் தொடர்ச்சியாக இது வரை நூற்றுக்கணக்கான உயிர்கள் பலியாகி மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தி வந்தது. இந்த நிலையில் மாவட்ட எஸ்பி ஸ்டாலின் எடுத்த அதிரடி நடவடிக்கையால் மாவட்ட ஆட்சியர் அழகுமீனா, நான்கு வழிச் சாலை பணிகள் முடியும் வரை கேரளாவுக்கு கனிமவளம் கொண்டு செல்லும் லாரிகளுக்கு தற்காலிக தடை விதித்தார்.

இது தொடர்பாக லாரி உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுநர்கள் தங்கள் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாக ஆட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டனர்.

தக்கலை மாணவி விபத்தில் இறந்த வழக்கில், தமிழ்நாட்டில் முதல்முறையாக லாரி ஓட்டுநர் மீது கொலை வழக்கு பதிவு செய்து எஸ்பி ஸ்டாலின் தொடர் டாரஸ் லாரி விபத்துகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் தொடக்கத்தை நிகழ்த்தியுள்ளார். மேலும் மாவட்ட காவல் கண்காணிப்பாளராக எஸ்பிஸ்டாலின்பொறுப்பேற்றுக் கொண்டது முதல் சில அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு டாரஸ் லாரிகளுக்கு கடும் கட்டுப்பாடுகளை விதித்தார்.

எஸ்.பி.யின் கடும் கட்டுப்பாடுகளை தொடர்ந்து 1000 லாரிகள் வரைசென்றநிலைமாறி, 300 லாரிகள் வரை எண்ணிக்கை குறைந்தன.

இருப்பினும் இந்த டாரஸ் லாரிகளால் விபத்துக்கள் தொடர் கதையாகி வருகிறது. தினந்தோறும் ஆயிரக்கணக்கான கனிமவள டாரஸ் லாரிகள் குமரி மாவட்டம் வழியாக கேரளாவுக்கு செல்கிறது. ஆரம்ப காலத்தில் இந்த கனிமவள டாரஸ் லாரிகளால் ஏற்பட்ட விபத்தின் காரணமாக காலை 8 மணிக்கு மேல் இரவு 9 மணி வரை கனிமவள டாரஸ் லாரிகள் செல்ல அனுமதி மறுக்கப்பட்டு இரவு 9 மணிக்கு மேல் வழக்கம்போல் கனிம வளங்கள் கேரளாவுக்கு கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்டனர். காலை முதல் இரவு வரை கனிமவள டாரஸ் லாரிகளுக்கு தடை விதிக்கப்பட்டதால் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரமான இரவு 9 மணிக்கு மேல் இந்த கனிம வள டாரஸ் லாரிகள் அதிவேகமாக செல்வதால் மற்ற எந்த வாகனங்களும் சாலையில் செல்ல முடிவதில்லை. நூற்றுக்கணக்கான கனிம வள டாரஸ் லாரிகள் ஒரே நேரத்தில் செல்வதாலும் ஒரு லாரியை முந்தி இன்னொரு லாரி செல்லும்போது சாலையில் மற்ற எந்த வாகனங்களும் செல்ல முடிவதில்லை. மேலும் இந்த கனிமவள டாரஸ் லாரிகள் மற்ற வாகனங்களை பொருட்படுத்தாமலும், குறுகிய சாலை என்றும் பாராமல் வேகமாக முந்தி செல்வதால் இருசக்கர வாகனங்கள் மற்றும் நான்கு சக்கர வாகனங்களில் மோதி அவ்வப்போது விபத்தும் நடந்து விடுகிறது.

அவ்வாறு கனிம வள டாரஸ் லாரிகளால் ஏற்படும் விபத்துகளினால் குடும்பத் தலைவர், குடும்பத் தலைவி, பிள்ளைகள் போன்றவர்களை இழந்த குடும்பங்கள்தான் குமரி மாவட்டத்தில் அதிகம் எனலாம்.

ஆனால் உயிர்பலியை பற்றி சிறிதும் கவலைப்படாத கனிம வளர டாரஸ் லாரி ஓட்டுநர்கள் எத்தனை விபத்துகள் நடந்தாலும் உயிர்பலிகள் ஏற்பட்டாலும் வழக்கம்போல் தங்களுடைய பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கனிம வளம் டாரஸ் லாரிகளால் ஏற்பட்ட விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்கள் குடும்பத்தினர் படும் இன்னல்கள், வேதனைகள் போன்றவைகள் யாரும் அறிந்திருக்க முடியாது. குறிப்பாக ஒரு குடும்பத் தலைவர் விபத்தில் இறந்தால் அந்த குடும்பமே நடுத்தெருவுக்கு வந்துவிடும், அதே போல் குடும்பத் தலைவி விபத்தில் இறந்தால் அந்த குடும்பம் சின்னா பின்னம் ஆகிவிடும். மேலும் விபத்தில் ஒரு குடும்ப உறுப்பினர் இறந்தால்அந்தக்குடும்பத்தின் கதையே முடிந்து போய் விடுகிறது. இது எல்லாம் வேகமாக செல்லும் கனிம வள டாரஸ் லாரிகள் ஓட்டும் ஓட்டுநர்களுக்கும் உரிமையாளர்களுக்கும் என்னவோ தெரிவதில்லை.

அண்மையில் தக்கலை பகுதியில் இரவில் கனிம வள டாரஸ் லாரி மோதி ஏற்பட்ட விபத்தில் கல்லூரி மாணவி உயிரிழந்த சம்பவம் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல் நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர் மற்றும் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் சாலையில் அமர்ந்து போராட்டம் நடத்தியதின் விளைவு சம்பவ இடத்திற்கு வந்த மாவட்ட எஸ்பி உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்து முதல்முறையாக ஓட்டுனர் மீது வழக்கு பதிவு செய்த சம்பவம் ஒரு உயிரை பறிகொடுத்த குடும்பத்திற்கு பெரும் ஆறுதலாக அமைந்தது.

மேலும் மாவட்ட எஸ்பியை தொடர்ந்து மாவட்ட ஆட்சியரும் உடனடியாக தடை விதித்து உத்தரவிட்டார்.

இப்படி மாவட்ட மக்கள் நலனில் அக்கறை உள்ள எஸ்பி மற்றும் ஆட்சியர் ஆகியோரின் அதிரடி நடவடிக்கையில் ஆடிப்போன கனிமவள டாரஸ் லாரி உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுநர்கள் சுமார் 500க்கும் மேற்பட்டவர்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திற்குவந்துதங்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு விட்டதாகவும் 5000 குடும்பங்களுக்கு மேல் இந்த தொழிலை நம்பி இருப்பதாகவும், எஸ் பி மற்றும் ஆட்சியர் போட்ட உத்தரவை ரத்து செய்து வழக்கம்போல் கனிமவள டாரஸ் லாரிகள் செல்ல அனுமதிக்க வேண்டும் எனவும் கூறி முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாவட்ட ஆட்சியர்நடவடிக்கைஎடுக்கவில்லை என்றால் தேர்தலை புறக்கணிக்கப் போவதாகவும் மிரட்டல் விட்ட சம்பவம் பெரும் அதிர்வலையை ஏற்படுத்தி உள்ளது.

இவர்களின் போராட்டம் குறித்து பொதுமக்கள் தின தமிழ் நாளிதழுக்கு கொடுத்த சிறப்பு பேட்டியில் கூறியிருப்பதாவது :

சுமார் 5000க்கும் மேற்பட்ட குடும்பங்கள் கனிம வள டாரஸ் லாரிகளால் வாழ்ந்து வருவதாகவும் இதனை தடை செய்ததால் 5000 குடும்பங்களின் வாழ்வாதாரம் முற்றிலுமாகதடைபட்டு உள்ளதாகவும் தெரிவித்துள்ளது மிகவும் இரக்கமற்ற கொடூர செயலென தெரிவித்த பொதுமக்கள் இந்த ஐயாயிரம் குடும்பங்களிலும் உள்ள குடும்பதலைவர்குடும்பதலைவி, பிள்ளைகள்நலமுடன் உள்ளனர் . இவர்களுக்கு வேறு வேலை செய்யலாம் காரணம் இவர்கள் மிகவும் தெம்புடனும் துடிப்புடனும் முக்கியமாக உயிருடன் உள்ளனர். 5000 குடும்ப உறுப்பினர்களும் மாற்று வேலை தேடிக் கொள்ளலாம் அவ்வாறு செய்யும் பட்சத்தில் வாழ்வாதாரம் பாதிக்காது.

ஆனால் இவர்களால் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்த குடும்பத்தில் உள்ளவர்கள் ஒரு உயிரை இழந்து வாடுவது மட்டுமல்லாமல் முழுமையாக வாழ்வாதாரத்தை இழந்து பரிதாபத்திற்குரிய நிலையில் உள்ளனர்.

கனிம வள டாரஸ் லாரிகளால் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்த நபர்களின் குடும்பங்கள் அடுத்து என்ன செய்வது எனதெரியாமல்திகைத்து நிற்பதையும் நம்மால் காண முடிகிறது. மேலும் கனிமவள டாரஸ் லாரி ஓட்டும் ஓட்டுநர்கள் இந்த தொழில் இல்லை என்றால் எந்த தொழில் வேண்டுமென்றாலும் நலமுடன் செய்யலாம் அதை விட்டுவிட்டு 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் ஒன்றிணைந்து ஆட்சியர் அலுவலகம் வந்து வாழ்வாதாரம் பாதித்து விட்டதாக கூறுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. இவர்களின் இத்தகைய செயல் மாவட்ட ஆட்சியரையே மிரட்டுவது போல் உள்ளது.

இதுவரை இல்லாத ஒரு வரலாற்று சிறப்புமிக்க முடிவை மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல் கண்காணிப்பாளர் எடுத்துள்ளனர். இதில் அவர்கள் உறுதியுடன் இருக்க வேண்டும். இனி ஒரு உயிரிழப்பு கனிமவள டாரஸ் லாரியால் இந்த மாவட்டத்தில் நடைபெறக்கூடாது.



டாரஸ் லாரி மோதி கல்லூரி மாணவி தலை நசுங்கி பலியான போது எடுத்தப்படம்



டாரஸ் லாரிகள் ஓட தடையால் காவல்கிணறு நான்கு வழிச்சாலையில் வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள லாரிகள் படம்




ஆட்சியர் அலுவலகத்தில் டாரஸ் லாரி உரிமையாளர்கள் மற்றும் டிரைவர்கள் முற்றுகையிட்ட போது எடுத்தப்படம்

கனிம வள டாரஸ் லாரி உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுநர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை மட்டுமே பார்க்கின்றனர். இவர்களால் ஏற்பட்ட விபத்தால் உயிரிழந்தவர்களின் குடும்பத்தாருக்கு இவர்கள் ஒரு வார்த்தை ஆறுதல் கூட சொல்லவில்லை. மேலும் தங்களால் இனி உயிர் பலி எதுவும் ஏற்படாது என்கின்ற உத்தரவாதமும் கூட இவர்கள்வாயில் இருந்து வரவில்லை. என்னதான் இந்த லாரி உரிமையாளர்களும் ஓட்டுநர்களும் நினைத்து இருக்கிறார்கள். பொதுமக்கள் உயிர் என்ன இவர்களுக்கு கிள்ளுக்கீரையா? எனவும் பொதுமக்கள் ஆக்ரோச கேள்வி எழுப்பி உள்ளனர். அதேபோல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கூறியது போல வேக கட்டுப்பாட்டு கருவி பொருத்துவோம் என இவர்கள் தரப்பிலிருந்து முழுமையாக தெரிவிக்கப்படவில்லை தொடக்க முதல் முடிவு வரை இவர்கள் தங்கள் பிரச்சனையை மட்டுமே பார்க்கின்றார்களே தவிர பொதுமக்களின் பிரச்சனைகளை நினைத்து கூட பார்க்கவில்லை என்பது என்னவோ நிசர்தமான உண்மை.





தின தமிழ்

நிருபர்கள் தேவை

வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக

தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை

தகுதிகள்

குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்

மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்

99944 66200 – 70102 64701

# பொட்டல் பகுதியில் மனநலம் பாதிக்கப்பட்ட பெண் மீட்பு: நிமிர் குழு நடவடிக்கை



சுசீந்திரம் : ஏப்.19

மணிக்கட்டி பொட்டல் பகுதியில் வயது முதிர்ந்த தாயால் பராமரிக்க இயலாத நிலையில் இருந்த மனநலம் பாதிக்கப்பட்டிருந்த பெண்ணை மீட்க, பொதுமக்கள் கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர். ஸ்டாலின் தலைமையிலான நிமிர் குழுவிற்கு தகவல் தெரிவித்தனர்.

நிமிர் குழு , நாம் ஒருவர் அறக்கட்டளை , அவர் பவுண்டேஷன் இணைந்து அப்பெண்ணை மீட்டனர். மேலும் உடல் நலம் பாதிக்கப்பட்டிருந்த அப்பெண்ணிற்கு ஆசாரி பள்ளம் மருத்துவமனையில் பத்து நாட்கள் சிகிச்சையும் வழங்கப்பட்டது. பின்னர் அப்பெண்ணை பால்குளம் பகுதியில் அமைந்துள்ள அசிசி பெண்கள் மனநல மறுவாழ்வு மையத்தில் ஒப்படைத்தனர்.

கைவிடப்பட்ட நிலையில் இருந்த அந்த பெண்ணிற்கு நிலையான பாதுகாப்பை ஏற்படுத்திக்கொடுத்த நிமிர் குழுவுக்கும், அவர் பவுண்டேஷனுக்கும்,அசிசி பெண்கள் மனநல மறுவாழ்வு மையத்திற்கும்,நாம்ஒருவர்அறக்கட்டளைக்கும் பொது மக்கள் நன்றி தெரிவித்தனர்.



### தென்காசி சட்டமன்றத் தொகுதி

# திமுக வேட்பாளர் கலை கதிரவனை ஆதரித்து அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் பிரச்சாரம்

தென்காசி ஏப்ரல் 19

தென்காசி மாவட்டம் தென்காசி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சுரண்டை பகுதியில் திமுக வேட்பாளர் கலை கதிரவனை ஆதரித்து அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் வாக்கு சேகரித்து தீவிர பிரச்சாரம் செய்தார்

முன்னதாக அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் மற்றும் தென்காசி சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் கலை கதிரவனுக்கும் அப்பகுதி பெண்கள் ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர். இதனை தொடர்ந்து அங்கிருந்த காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி அவர் பேசுகையில் தென்காசி சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள கலை கதிரவனின் தந்தை முதலமைச்சரிடம் 50 வருடமாக நேரடி தொடர்பில் இருந்து வருவதாகவும்

இதனால் இவர் வெற்றி பெற்றால் உங்களுக்கு என்ன தேவை என்பது கேட்டு அனைத்தும் கிடைக்க பெறும் என பேசினார்.

இதனால் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து கலை கதிரவனை அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார் மேலும் முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையிலான திமுக ஆட்சியில் கடந்த ஐந்து ஆண்டுகளில் மக்களுக்கு செய்த நலத்திட்ட உதவிகள் மற்றும் சாதனைகளை விளக்கி கூறினார் இந்நிகழ்ச்சியில் தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் ஜெயபாலன், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் பழனி நாடார் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



### தருமபுரி சட்டமன்றத் தொகுதியில்

# பாமக வேட்பாளர் சௌமியா அன்புமணி தீவிர வாக்கு சேகரிப்பு

தருமபுரி ஏப்ரல் 19

தருமபுரி சட்டமன்ற தொகுதியில் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் போட்டியிடும் பாமக வேட்பாளர் சௌமியா அன்புமணி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார். மேலும் தருமபுரி நகரம், கொல்லஅள்ளி ஊராட்சி மற்றும் பல்வேறு ஊராட்சிகளுக்குப்பட்ட பகுதிகளில் கிராமம் கிராமமாக சென்று வேட்பாளர் சௌமியா அன்புமணி மாம்பழம் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார்.

அப்போது அவருக்கு பெண்கள் ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர். இதைத் தொடர்ந்து அவர் கூறியதாவது. அதிமுக தலைமையிலான அரசு அமைந்தவுடன் மகளிர் உரிமை தொகை ரூ. 2000 ஆக உயர்த்தி வழங்கப்படும். அனைவருக்கும் இலவசபிரிட்ஜ் வழங்கப்படும். பேருந்துகளில் ஆண்களும் இலவசமாக பயணம் செய்யலாம். காவேரியிலிருந்து கடலில் கலக்கும் உபரி நீரைமீன்மோட்டார்மூலம் ஏரி, குளம் ஆகியவைகளில் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும் . சிப்காட் பணி நிறைந்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். தருமபுரி முதல் மொரப்பூர் வரை ரயில்வே பணி விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் . பாஜக மாவட்ட செயலாளர் சரவணன் அமமுக மாவட்டச் செயலாளர் டி கே ராஜேந்திரன் அதிமுக நகரச் செயலாளர் பூ கடை ரவி மற்றும் மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், பொதுமக்கள் உடனிருந்தனர்.

# மத்திய அமைச்சர் அமித்ஷா ஈரோடு வருகை: டிரோன்கள் பறக்க தடை

ஈரோடு ஏப் 19

மத்திய அரசின் உள்துறை அமைச்சர் அமித் ஷா தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் பிரசாரத்தில் கலந்து கொள்வதற்காக நாளை 19 ந் தேதி ஈரோடு மாவட்டத்திற்கு ஹெலிகாப்டர் மூலம் வருகை புரிந்து தேர்தல் பிரச்சார நிகழ்ச்சிகளில் பங்கேற்கவுள்ளார். இதனையொட்டி உள்துறை அமைச்சர் ஹெலிகாப்டரில் வந்திறங்கும் ஈரோடு மாவட்டம் கொடுமுடி வட்டம் தாமரைப்பாளையம், தாமரை மெட்ரிகுலேசன் பள்ளி மைதானம் மற்றும் பள்ளி மைதானத்திலிருந்து சிவகிரி செல்லும் வழிகளில் 2 கி.மீ. சுற்றளவிற்குள் ட்ரோன்கள் மற்றும் இதர ஆளில்லா வான் வழி வாகனங்கள் பறக்க தடை விதிக்கப்படுகிறது. தடையை மீறி ட்ரோன்கள் மற்றும் இதர ஆளில்லா வான் வழி வாகனங்கள் பறக்கவிடும் நபர்கள் மீது காவல்துறை மூலம் தக்க நடவடிக்கை தெரிவித்துக்கொள்ளப்படும். எடுக்கப்படும் என்று ஈரோடு மாவட்ட ஆட்சியர் கந்தசாமி தெரிவித்து உள்ளார்



சுதந்திரப்போராட்ட வீரர் மாவீரன் தீரன் சின்னமலை அவர்களின் 271 வது பிறந்த நாளை முன்னிட்டு, ஈரோடு மாவட்டம், அரச்சலூர்பே ரூராட்சி, ஓடாநிலையில் தீரன் சின்னமலை மணிமண்டபத்தில்அ மைந்துள்ள, மாவீரன் தீரன் சின்னமலை அவர்களின் திருவுருவச்சிலைக்கு மாவட்ட கலெக்டர் ச.கந்தசாமி மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.



### குளச்சலில்

# இறால் மீன் சீசன் துவக்கம்

## விலை குறைவால் மீனவர்கள் கவலை

குளச்சல், ஏப்.19

குளச்சல் கடல் பகுதியில் 300க்கும் மேற்பட்ட விசைப் படகுகள் மற்றும் 1000க்கும் மேற்பட்ட வள்ளம், கட்டு மரங்களில் மீன்பிடித் தொழில் நடைபெறுகிறது. விசைப் படகுகள் ஆழ்கடல் பகுதிகளுக்கு சென்று தங்கி மீன்பிடித்து விட்டு குறைந்த பட்சம் 10 நாட்கள் கழிந்து கரைக்கு வருவது வழக்கம்.

ஆழ்கடல் பகுதியில் கேரை, சுறா, கணவாய், இறால் போன்ற உயர் ரக மீன்கள் கிடைக்கும். தற்போது குளச்சல் பகுதியில் கேரை மீன் சீசன் ஆக இருந்தும், அந்த மீன்கள் கிடைக்கவில்லை. இதனால் ஆழ் கடல் பகுதியில் சென்று மீன்கள் கிடைக்காமல் விசைப்படகுகள் ஏமாற்றத்துடன் கரை திரும்புவது வாடிக்கையாக உள்ளது. ஒரு சில படகுகளில் மீன் பிடிக்க செல்பவர்கள் சிறிதளவு மீன்களுடன் கரை திரும்புகின்றனர். அவர்களுக்கும் சம்பளம் மற்றும் டீசல் செலவிற்கு கூட வருமானம் கிடைக்காத நிலை உள்ளது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் கரை திரும்பிய 2 விசைப்படகுகளில் குறைந்த அளவு சிறிய இறால் எனப்படும் புல்லன் மீன்கள் கிடைத்தன. அவற்றை மீனவர்கள் ஏலக் கூடத்தில் இறக்கி வைத்து விற்பனை செய்தனர். இந்த வகை புல்லன் இறால் கிலோ தலா ரூ 50க்கு விலை போனது. இது வழக்கமான விலை விட குறைவு. இந்த புல்லன் இறால் முன்பு கிலோ ரூ70 வரை போனதென்பது குறிப்பிடத்தக்கது. இதனால் விசைப்படகு உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். குளச்சலில் போதிய மீன்கள் கிடைக்காததால் மீன்பிடித் தொழில் மிகவும் மந்தமான நிலையில் உள்ளது.

### பறக்கும் படையினர் சோதனையில்

# ரூ.2.83 லட்சத்துடன் சிக்கிய தி.மு.க. பிரமுகர்கள்;3 பேர் மீது வழக்குபதிவு

தென்தாமரைகுளம், ஏப்.19

தமிழக சட்டமன்ற பொதுத்தேர்தலை யொட்டி குமரிமாவட்டத்தில் தேர்தல் முறைகேடு நடைபெறாமல் தடுக்கவும், தேர்தல் நடத்தை விதி களை மீறி வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசு பொருட்கள் கொடுப்பதை தடுக்கவும் தீவிர கண்காணிப்பு பணி நடந்து வருகிறது.

6 சட்டமன்ற தொகுதிகளிலும் 8 மணி நேர சுழற்சி அடிப்படையில் பறக்கும் படைகளும், நிலையான கண்காணிப்பு படைகளும் அமைக்கப்பட்டு தீவிர வாகன சோதனை நடத்தப்பட்டு வருகிறது.

இந்தநிலையில் கன்னியாகுமரி அருகே உள்ள நரியன் விளை பகுதியில் பறக்கும் படை அதிகாரிகள் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியாக வந்த கார் ஒன்றை தடுத்து நிறுத்தி சோதனையிட்டதில், எந்த வித ஆவணங்களும் இன்றி ரூ.2,83,500 பணம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

மேலும் அந்த காரில் வாக்காளர் பட்டியல் புத்தகங்கள் மற்றும் தி.மு.க. தேர்தல் விளம்பர நோட்டீசுகள் இருந்ததையும் அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர். இதையடுத்து கார் மற்றும் பணத்தை பறிமுதல் செய்த அதிகாரிகள், இது குறித்து தென்தாமரைகுளம் காவல் நிலையத்தில் புகார் அளித்தனர்.

அந்த புகாரின் அடிப்படையில் தி.மு.க. பிரமுகர்கள் 3 பேர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



### பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற தொகுதி

# திமுக வேட்பாளர் பி. பழனியப்பன் பொதுமக்களிடம் தீவிர வாக்கு சேகரிப்பு

தருமபுரி ஏப்ரல் 19

தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற தொகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் திமுக வேட்பாளர் பி. பழனியப்பன் தீவிர பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார். இந்நிலையில் பாப்பிரெட்டிப்பட்டி தொகுதிக்கு உட்பட்ட கிருஷ்ணாபுரம், ஆண்டிஅள்ளி, கே. நடுஅள்ளி, பழைய தருமபுரிஆகிய ஊராட்சிகளை சேர்ந்த 50 க்கும் மேற்பட்ட கிராமங்களில் சூறாவளி சுற்றுப்பயணம் செய்து தனக்கு உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரித்தார்.

அப்போது அவர் பேசுகையில் திமுக அரசின் 5 ஆண்டு ஆட்சியில் பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளது. விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு நெல் கொள்முதல் குவிண்டாலுக்கு விலை ரூ. 3,500, கரும்பு டன் ரூ. 4,000 வழங்கப்படும், பால் கொள்முதல் விலை ஐந்து உயர்த்தி தரப்படும், மீட்டர் பொருத்தாமல் நவீன மின்சார பம்பு செட்டுகள் வழங்கப்படும் என்றார். இந்த பிரச்சாரத்தின் போது ஒன்றிய செயலாளர் பிரபு ராஜசேகர், வெற்றி உள்ளிட்ட கூட்டணி கட்சிகளில் நிர்வாகிகள், பொது மக்கள் கலந்து கொண்டனர்.



தருமபுரி மாவட்டம் அரூர் (தனி) சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் பணியில் ஈடுபடும் அரசு அலுவலர்கள் அனைவரும் தபால் வாக்களிக்க ஏதுவாக அமைக்கப்பட்டுள்ள வாக்கு பெட்டியில் அலுவலர்கள் அவர்களின் வாக்குகளை அச்சமின்றி நேர்மையான முறையில் செலுத்தும் பணி நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சியர் சதீஷ் பார்வையிட்டார். அரூர் தேர்தல் நடத்தும் அலுவலர் செம்மலை, உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் வள்ளி உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



# கனிவள கொள்ளைக்கு எடப்பாடியார் முதல்வராக வந்தவுடன் முடிவு காணப்படும்

## சட்டமன்றத் தொகுதி அதிமுக வேட்பாளர் கிருஷ்ணமுரளி பேச்சு

தென்காசி ஏப்ரல் 19

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் சட்டமன்ற தொகுதியில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சியின் அஇஅதிமுக வேட்பாளர் கிருஷ்ண முரளி என்ற குட்டியப்பா செங்கோட்டை நகரப்பகுதியில் வீதி வீதியாக சென்று பிரச்சாரம் மேற்கொண்டார் வழி நெடுகிலும் பொதுமக்கள் மற்றும் கழக நிர்வாகிகள் அவருக்கு மாலை அணிவித்து மலர்தூவி சிறப்பான வரவேற்பு அளித்தனர். முன்னதாக செங்கோட்டை காவல் நிலையம் அருகில் உள்ள பேரறிஞர் அண்ணா திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்து பிரச்சாரத்தை துவக்கிய அவருக்கு நகர்மன்ற உறுப்பினர் சுடர் ஒளி ராமதாஸ் ஏற்பாட்டில் கிரேன் மூலம் ராட்சத மாலை அணிவிக்கப்பட்டது, கே.சி ரோடு வம்பளந்தான் முக்கு, மேலூர் உள்ளிட்ட பகுதிகளில் பிரச்சாரம் மேற்கொண்ட அவர் காந்தி சிலை அருகில் கூடியிருந்த பொதுமக்களிடம் பேசும் போது எடப்பாடியார் முதலமைச்சராக வந்த உடன் அனைத்து குடும்பங்களுக்கும் பத்தாயிரம், மகளிருக்கு மாதம் ரூ2000 குல விளக்கு திட்ட உதவித்தொகை, கல்வி கடன் ரத்து, விவசாய கடன் ரத்து, ஆண் பெண் இருபாலரும் கட்டணமில்லா பேருந்து பயணம், தாலிக்கு தங்கம், மடிக்கணினி என எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்த உள்ளார்கள் எனவே உங்களது பொன்னான புனிதமான வாக்குகளை இரட்டை இலை சின்னத்திற்கு வாரி வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் உங்களின் பேராதரவுடன் கடந்த 5 ஆண்டுகளில் சட்டமன்ற உறுப்பினராக செயல்பட்டு வந்த நிலையில் இந்த விடியா திமுக ஆட்சியில் சட்டமன்ற மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ 3 கோடிக்கும் அதிகமான பணிகளை செயல்படுத்த கொடுத்த நிதியினை பயன்படுத்தாமல் திருப்பி அனுப்பி வைத்தது

இந்த விடியா ஆட்சியின் அரசியல்வாதிகள் அதிகாரிகள் ஆனால் இதையும் மீறி பேருந்து நிழற்குடைகள், நியாய விலை கடைகள், உணவருந்தும் கூடம், பள்ளிகூடுதல் வகுப்பறை, நூலகம், சுற்றுச்சுவர் அமைத்தல் என இந்த ஐந்து ஆண்டுகளில் ரு 15 கோடியே 80 லட்சத்திற்கான பணிகளை தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் செய்துள்ளேன் இந்த மக்களோடு மக்களாக பல போராட்டங்களில் நான் அவர்களுக்கு உறுதுணையாக நின்ற காரணத்தால் தான் மண்ணின் மைந்தன் என்று கூறுகிறேன். இதுமட்டுமல்லாமல் இங்கிருந்து கேரளாவுக்கு செல்லும் கனிமவள கொள்ளையை தட்டி கேட்டதில் என்னை விட இந்த மாவட்டத்தில் எந்த அரசியல்வாதியும் கிடையாது இங்கு வைத்திருக்கும் 3 ப்ளெக்ஸ் போர்டில் வைத்திருப்பது கனிமவள கொள்ளை குறித்து நான் பேசியதில் வந்த பத்திரிகை செய்தி தான் வைக்கப்பட்டுள்ளது இந்த கனிமவள கொள்ளைக்கு எடப்பாடியார் முதலமைச்சராக வந்த உடன் முடிவு காணப்படும் அதை நான் விடுவதாகவும் இல்லை

மேலும் ஒரு தகவல் என்னவென்றால் கனிமவள வாகன அசோசியேஷன் சார்பில் என்னை தோற்கடிக்க 3 கோடி வழங்கியுள்ளனர் உயிரை கொடுத்து வேலை செய்ய ஓராயிரம் தொண்டர்கள் இருக்கும் போது இந்த 3 கோடி இல்லை 30 கோடி கொடுத்தாலும் எதுவும் செய்ய முடியாது இந்த திமுகவினர் 8000 ரூபாய்க்கு கூப்பன் அடித்து கொடுக்கிறார்களாம் அது மிகப்பெரிய ஏமாற்று வேலை என்பதை தாய்மார்கள் உணர்ந்து கொள்ளுங்கள் என்று பேசினார்.



## தருமபுரியில்

# முன்னாள் பிஜேபி மாநில தலைவர் அண்ணாமலை கூட்டணி கட்சி வேட்பாளர்களுக்கு தீவிர வாக்கு சேகரிப்பு

தருமபுரி ஏப்ரல் 19

தருமபுரி மாவட்ட பிஜேபி சார்பில் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர்கள் கே. பி. அன்பழகன் (பாலக்கோடு), சம்பத்குமார் (அரூர் தனி), மரகதம் வெற்றிவேல் (பாப்பிரெட்டிப்பட்டி) ஆகியோருக்கு இரண்டை இலை சின்னத்திலும், பாமக வேட்பாளர்கள் சௌமியா அன்புமணி (தருமபுரி), பாடி செல்வம் (பென்னாகரம்) ஆகியோருக்கு மாம்பழம் சின்னத்திலும் முன்னாள் பிஜேபி மாநில தலைவர் அண்ணாமலை தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். தமிழகத்திற்கு மத்திய அரசு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி உள்ளது. 100 நாள் வேலை திட்டத்தின் கீழ் தமிழகத்திற்கு மத்திய அரசு நிதி வழங்கி உள்ளது. தமிழகத்தில் அதிமுக தலைமையிலான அரசு அமைந்த உடன் தேர்தல் அறிக்கையில் அறிவித்துள்ள அனைத்து திட்டங்களும் நிறைவேற்றப்படும் என்றார். இதில் பிஜேபி மாவட்ட தலைவர் சரவணன், நகர தலைவர் சாய் ஆறுமுகம் , அமமுக மாவட்டச் செயலாளர் டி. கே. ராஜேந்திரன், அதிமுக பாப்பிரெட்டிப்பட்டி சட்டமன்ற உறுப்பினர் கோவிந்தசாமி, நகர செயலாளர் பூக்கடை ரவி, பாமக மாவட்ட செயலாளர் வெங்கடேஸ்வரன் மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டு, கிருஷ்ணகிரி மாவட்ட விளையாட்டு அரங்கில், தேர்தல் திருவிழா தமிழகத்தின் பெருவிழா" என்ற தலைப்பின் கீழ், 100 சதவிகிதம் வாக்குப்பதிவு வலியுறுத்தி மாவட்ட நிர்வாகத்துடன் பிசினஸ் நெட்வொர்க் இன்டர்நேஷனல் மற்றும் டாக்டர் மூன்ஸ் சாரிடபுள் அறக்கட்டளை இணைந்து சுமார் 2500 நபர்கள் பங்கு பெற்ற மாபெரும் விழிப்புணர்வு நடைபயண பேரணியை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் கொடியசைத்து துவக்கி வைத்து நடைபயணத்தில் கலந்துக்கொண்டார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் .பெ.தங்கதுரை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் .கவிதா உள்ளிட்ட பலர் உள்ளனர்.

## குமரியில்

# நாளை 20ஆம் தேதி ராகுல் காந்தி பிரச்சாரம்

நாகர்கோவில், ஏப். 19

அகில இந்திய காங்கிரஸ் அமைப்பின் முக்கிய தலைவரும், நாடாளுமன்ற எதிர்க்கட்சி தலைவருமான ராகுல் காந்தி நாளை 20ஆம் தேதி கன்னியாகுமரி மாவட்டத்தில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிரம்மாண்ட தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்கிறார்.



இதற்காக டெல்லியில் இருந்து விமானம் மூலம் கேரளா மாநிலம் திருவனந்தபுரம் வரும் அவர் அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் குளச்சலுக்கு வருகை தருகிறார்.

நாளை காலை 10:30 மணி அளவில் அங்கு நடைபெறும் பொது கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றுகிறார்.

ராகுல் காந்தி வருகைக்காக மண்டைக்காடு அருகே அமைந்துள்ள லட்சுமிபுரம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மைதானத்தில் தேர்வு செய்யப்பட்டு அங்கு ஹெலிப்பேடு தளமும் மற்றும் பிரம்மாண்ட மேடை அமைக்கும் பணிகள் தற்போது மாவட்ட காங்கிரஸ் கமிட்டியின் மேற்பார்வையில் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

ராகுல் காந்தி வருகையையொட்டி குமரி மாவட்ட காவல்துறையினர் லட்சுமிபுரம் கல்லூரி மைதானம் மற்றும் குளச்சல் சுற்று பகுதி முழுவதும் தங்கள் பாதுகாப்பு வளையத்திற்குள் கொண்டு வரும் வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்துள்ளனர். மைதானத்தில் முன்னேற்பாடு பணிகளை காங்கிரஸ் நிர்வாகிகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து வருகின்றனர்.

## பொள்ளாச்சி, ஆ.சங்கம்பாளையம் பள்ளிவாசலில்

# வாக்கு சேகரித்த திமுக கூட்டணி வேட்பாளர்



கோவை ஏப்:19

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு பொள்ளாச்சி திமுக கூட்டணி வேட்பாளர் நித்தியானந்தன் ஆச்சிபட்டி ஊராட்சிக்கு உட்பட்ட ஆ. சங்கம்பாளையம் மஸ்ஜிதே நூர் சுன்னத் ஜமாத் பள்ளிவாசலில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். நிகழ்வில் பள்ளியின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் பொள்ளாச்சி 26 வது வார்டு நகர் மன்ற உறுப்பினர் எம். கே சாந்தலிங்கம் மற்றும் இஸ்லாமிய பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## ஆமணக்கன் விளை

# வாவை நற்பதியில் துவையல் தவசு தின விழா




தென்தாமரைகுளம்., ஏப். 19.

கன்னியாகுமரி மாவட்டம் ஆமணக்கன் விளை கடற்கரையில் அமைந்துள்ள வாவைநற்பதியில் அய்யா வைகுண்ட சுவாமியின் துவையல் தவசை நினைவு கூறும் விதமாக ஆண்டுதோறும் சித்திரை மாதம் முதல் வெள்ளிக்கிழமை துவையல் தவசு தின விழா கொண்டாடப்பட்டு வருகிறது இந்த ஆண்டுக்கான விழா பேராசிரியர் ஆர். தர்ம ரஜினி தலைமையில் நடைபெற்றது

தர்மகத்தா செ. பாலசந்தர், தர்மகத்தா து .பாலசுரேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர் ஓய்வு பெற்ற ஆசிரியர் ஆதித்தன் , நாகராஜன், சென்னை முருகன் ஆகியோர் துவையல் தவசு பற்றி பேசினர். வி. கே.புரம் சதீஷ்குமார் உட்பட அய்யாவழிஅன்புக்கொடிமக்கள்பலர் கலந்து கொண்டனர். அய்யா வைகுண்டசாமியின் ஆகம மந்திரம் சொல்லப்பட்டது . தொடர்ந்து சிறப்பு நிகழ்ச்சிகளும் அன்னதர்மமும் நடந்தன .

ஏற்பாடுகளை தர்மகத்தா து.பால சுரேஷ் தலைமையில் விழா குழுவினர் செய்திருந்தனர்.



## வேப்பனப்பள்ளி தொகுதியை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல

# உதயசூரியன் சின்னத்திற்கு வாக்களிக்க வேட்பாளர் பாத்தகோட்டா சீனிவாசன் பொதுமக்களிடம் வேண்டுகோள்

வேப்பனப்பள்ளி ஏப்19

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வேப்பனப்பள்ளி சட்டமன்ற தொகுதிக்கு திமுக வேட்பாளராக பாத்தகோட்டா சீனிவாசன் தினமும் காலை முதல் இரவு வரை பல்வேறு கிராமங்களுக்கு சென்று தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார் இதன் ஒரு பகுதியாக வேப்பனப்பள்ளி மேற்கு ஒன்றியத்தில் புதுக்கோட்டை, சின்னதீர்த்தம், பாலனப்பள்ளி, பதிமடுகு, சிகரலப்பள்ளி, தீர்த்தம், அலே குந்தாணி, சூரியனப்பள்ளி, நல்லூர், உள்ளிட்ட 25க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு சென்று பொதுமக்களிடம் துண்டு பிரசுரங்களை கொடுத்து வாக்கு தீவிர சேகரிப்பில் ஈடுபட்டார்.

அப்போது அங்கு கூடியிருந்த பெண்கள் அனைவரும் வேட்பாளர் சீனிவாசனுக்கு ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பளித்தனர். அப்போது பொதுமக்களிடம் பேசுகையில், வேப்பனப்பள்ளி தொகுதியில் கடந்த ஐந்தாண்டுகளில் திமுக அரசின் பல்வேறு நலத்திட்டங்கள் கொண்டுவரப்பட்டன.

இந்தத் தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிடுகின்ற கேபி முனுசாமி கிருஷ்ணகிரி தொகுதி மக்களால் புறக்கணிக்கப்பட்டவர் என்றும், எதிர்வரும் ஐந்தாண்டுகள் அரசின் நலத்திட்டங்களை விரைவாக பெற்றிட என்னை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டுகோள் விடுத்தார். அப்போது தேமுதிக, காங்கிரஸ் உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் இந்த வாக்கு சேகரிப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## இறுதி கட்ட விறுவிறு வாக்கு சேகரிப்பில்

# வேப்பனப்பள்ளி தவெக வேட்பாளர் எஸ்.ஆர்.சம்பங்கி. 40 ஆழ்துளை கிணறுகளை அமைத்து தருவதாக வாக்குறுதி

வேப்பனப்பள்ளி ஏப் 19

சட்டமன்றத் தேர்தலுக்கு இன்னும் இரண்டு நாட்கள் உள்ள நிலையில் வேப்பனப்பள்ளி தொகுதியில் திமுக அதிமுக தாவே.க உள்ளிட்ட கட்சிகளின் வேட்பாளர்கள் விறுவிறு வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இதில் வேப்பனப்பள்ளி சட்டமன்ற தொகுதி த.வெ.க வேட்பாளர் சம்பங்கி இன்று நரிக்குறவர் மக்களிடம் வாக்கு சேகரித்தார். கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனப்பள்ளி சட்டமன்ற தொகுதி, தமிழக வெற்றி கழக வேட்பாளர் எஸ்.ஆர் சம்பங்கி வேப்பனப்பள்ளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மகாராஜா கடை, சாமனப்பள்ளி, பீளாளம், எலசேப்பள்ளி, நரசிம்மசாமி கோவில், பெத்தசிகரலப்பள்ளி, கொட்டாயூர், சின்னதின்னூர், ஆருளபள்ளி, சிம்பல்திராடி, முருகனப்பள்ளி, காமன் தொட்டி, நல்லகான கொத்தபள்ளி, உள்ளிட்ட 13 கிராமங்களில் விசில் சின்னத்தில் வாக்கு சேகரித்தார்.



அப்போது திப்பனப்பள்ளி நரிக்குறவர் இனமக்கள் குடியிருந்து வரும் பகுதிகளில் ஊசி மணி, பாசிமணி, மலர் மாலை கட்டியவாறு த.வெ.க வின் தேர்தல் வாக்குறுதிகளை எடுத்துரைத்து வாக்குகள் சேகரித்தார். அப்போது குழந்தைகளை தூக்கி கொஞ்சி விசில் வழங்கி உற்சாகப்படுத்தினார். நரிக்குறவர் இன பெண்கள் கடந்த காலங்களில் எம்.ஜி.ஆர், ஜெயலலிதாவிற்கு பிறகு விஜக்கு ஆதரவு தெரிவிப்பதாக மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். முன்னதாக வேட்பாளர் வருகையையொட்டி மகளிர்கள் விசில் ஊதி ஆர்த்தி எடுத்து சிறப்பான வரவேற்பு அளித்தனர்.இந்த நிகழ்ச்சியில் வேப்பனப்பள்ளி தெற்கு ஒன்றிய செயலாளர் அம்ரிஷ், வடக்கு ஒன்றிய செயலாளர் ஜெகதீஷ் மற்றும் அழகேசன், ஆனந்தன், ஜெகன், முருகேசன், மஞ்சு, ஆனந்தன், பாபு, தனம், ஒன்றிய செயலாளர் மகாராஜாகடை சங்கர், உள்ளிட்ட ஏராளமான கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு வாக்கு சேகரித்தனர். இதனைத் தொடர்ந்து மகாராஜா கடை பகுதிக்கு சென்ற வேட்பாளர் சம்பங்கி அங்கு கூடியிருந்த பொதுமக்கள் பட்டாசு வெடித்தும் மலர்த்துவியும் சிறப்பான வரவேற்பு கொடுத்தனர் அவர்கள் முன் பேசிய வேட்பாளர் இந்த பகுதியில் குடிநீர் பிரச்சினையை தீர்க்க 40 ஆழ்துளை கிணறு அமைத்து தருவதாக வாக்குறுதி அளித்தார். இதை கேட்ட பொதுமக்கள் உற்சாகத்தில் விசில் அடித்து தங்களது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.

## பேச்சிப்பாறை அருகே

# பைக் காட்டெருமை மோதல்: 2 பேர் படுகாயம்



மார்த்தாண்டம், ஏப்.19

பேச்சிப்பாறை அருகே சிலோன் காலனி பகுதியை சேர்ந்தவர் அருள் தாஸ் (49) மற்றும் செந்தில் (45). இவர்கள் மரம் வெட்டும் தொழிலாளர்கள் . நேற்று காலை இருவரும் பைக்கில் வேலைக்கு சென்றனர். அப்போது சுடலிக் காடு என்ற பகுதியில் செல்லும்போது, காட்டில் இருந்து வெளியே வேகமாக வந்த காட்டெருமை ஒன்று பைக் மீது பலமாக மோதியது. இதில் அருள் தாஸ், செந்தில் தூக்கி வீசப்பட்டு பலத்த காயமடைந்தனர். உடனடியாக அப்பகுதியில் வந்த வாகன ஓட்டிகள், அக்கம்பக்கத்தினர் மீட்டு குலசேகரம் தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக கொண்டு சென்றனர். களியல் வனத்துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

# காவிக்கொடி என்பது இந்துக்களின் அடையாளம்



திருப்பூர்: ஏப் 19

தமிழக முதல்வர் ஸ்டாலின் தேனி தேர்தல் பரப்புரையில் தமிழகத்தில் இனி காவி கொடி பறக்காது என்று பேசியிருந்தார் இதனை இந்து முன்னேற்ற கழகம் வன்மையாக கண்டிக்கிறது திமுகவிற்கும் மற்ற கட்சிகளுக்கும் உள்ள கருத்து வேறுபாடுகளில் காவி கொடியை இழுப்பது அநாகரிமான செயலாகும் காவிக்கொடி என்பது இந்துக்களின் அடையாளம் மற்றும் சாதுக்கள் துறவிகளின் அடையாளம் எனவே காவி கொடியை பற்றி விமர்சனம் செய்தது கண்டனத்துக்குரியது திருப்பூர்புதிய பேருந்து நிலையம் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் இந்து முன்னேற்ற கழகம் மாநிலத் தலைவர் கோபிநாத் தலைமையில் நடைபெற்றது..

# திருச்சியில் போதை மாத்திரை விற்ற 2 இளைஞர்கள் கைது

திருச்சி, ஏப். 19

திருச்சி பாலக்கரை பெல்ஸ் கிரவுண்ட் பகுதியில் போதை மாத்திரை விற்பனை நடைபெறுவதாக கிடைத்த ரகசிய தகவலின் பேரில், பாலக்கரை காவல் நிலைய போலீசார் அதிரடி சோதனை நடத்தினர். இதில், காஜாபேட்டை பசுமடம் பகுதியைச் சேர்ந்த பிரகாஷ்ராஜ் (20) மற்றும் சபரி ராகவன் ஆகியோர் போதை மாத்திரைகளை விற்பனை செய்து கொண்டிருந்தது தெரியவந்தது. இதனையடுத்து, பாடகரை காவல் நிலைய போலீசார் இருவரையும் கைது செய்து, அவர்களிடமிருந்து போதை மாத்திரைகள் மற்றும் ஊசி பாட்டில்களை பறிமுதல் செய்தனர்.

## திருச்சி

# நண்பன் இறந்த துக்கத்தில் வாலிபர் தூக்கிட்டு தற்கொலை

திருச்சி, ஏப். 19

திருச்சி சோமரசம்பேட்டை பகுதியில் கடந்த 11 ஆண்டுகளாக குடும்பத்துடன் வசித்து வந்த விருதுநகர் மாவட்டம் அய்யம்பட்டியைச் சேர்ந்த தற்காப்பு பயிற்சியாளர் அலெக்ஸ் பாண்டியன், கருத்து வேறுபாடு காரணமாக மனைவியைப் பிரிந்து வாழ்ந்து வந்தார். இந்நிலையில், அவரது நெருங்கிய நண்பர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படும் சம்பவத்தால் மனமுடைந்த அலெக்ஸ் பாண்டியன், தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து சோமரசம்பேட்டை போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சட்டசபை தேர்தலில் வாக்களிக்க பார்வை குறைபாடுடைய வாக்காளர்களுக்கு சிறப்பு ஏற்பாடு

தஞ்சாவூர் ஏப்ரல் 19

வருகின்ற 23ஆம் தேதி சட்டசபை தேர்தலில் வாக்களிக்க பார்வை திறன் குறைபாடு உடைய வாக்கா ளர்களுக்கு சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என தஞ்சாவூர் மாவட்ட தேர்தல் அலுவலரும், கலெக்டருமான பிரியங்கா பங்கஜம் தெரிவித்தார்

இதுகுறித்து அவர் வெளியிட்டு ள்ள செய்தி குறிப்பில் கூறியிருப் பதாவது

சட்டசபை பொதுத் தேர்தலுக் கான வாக்குப்பதிவு தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள 8 சட்டசபை தொகுதிக்குட்பட்ட அனைத்து வாக்குச்சாவடி நிலங்களிலும் வருகிற 23ஆம் தேதி வியாழக் கிழமை காலை 7 மணி முதல் மாலை 6:00 மணி வரை நடைபெற உள்ளது

வாக்குப்பதிவு நாளன்று வாக்குச் சாவடிக்கு சென்று வாக்களிக்கும் பார்வை திறன் குறைபாடுடைய மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் தங்கள் வாக்கினை செலுத்திட ஏதுவாக பிரெய்லி எழுத்துருவில் தயாரிக்கப்பட்ட மாதிரி வாக்குசீட்டுகள்தஞ்சாவூர்மாவட்டத்தில்உள்ளஅனைத்து வாக்குச்சாவடிக ளுக்கும் அச்சடிக்கப்பட்டு வழங்கப் பட்டுள்ளது .இந்த வசதியை பயன் படுத்தி தங்கள் வாக்கினை செலுத் த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

தேர்தல் நடத்தை விதிமுறைகள் 1961 விதி (49 என்) ன் கீழ் பார்வைத் திறன் குறைபாடு உடைய மாற்றுத் திறனாளி வாக்காளர் தனது சார்பாகவும் தனது விருப்பத்திற்கு இணங்கவும், வாக்குப்பதிவு செய் வதற்காக 18 வயதுக்கு குறையாத ஒரு நபரை தன்னுடன் வாக்குப் பதிவு அறைக்கு அழைத்து செல்லலாம் மேற்கண்டவாறு அதில் கூறப் பட்டுள்ளது



## மார்த்தாண்டம் மேம்பாலத்தில்

# அத்துமீறி மஞ்சள் கோட்டை தாண்டி அதிவேகத்தில் பயணிக்கும் அரசு பேருந்துகள்

மார்த்தாண்டம், ஏப்.19

மார்த்தாண்டம் மேம்பாலத்தில் தொடர் விபத்துகளை தடுக்கும் பொருட்டு பல்வேறு இடங்களில் 40 கிலோமீட்டர் வேகத்திற்கு மேல் செல்லக்கூடாது என்று விளம்பர பலகை அமைத்தும் சாலையில் நடுவே ஓவர் டேக் செய்ய தடை விதித்து இரண்டு மஞ்சள் கோடுகளை வரைந்தும் போக்குவரத்து போலீசார் நடவடிக்கை எடுத்து வந்தனர். அதன் காரணமாக விபத்துக்கள் குறைந்தது.

ஆனால் அரசு பேருந்துகள் மார்த்தாண்டம் மேம்பாலத்தில் போக்குவரத்து விதிமுறைகளை மீறி அதிவேகத்தில் பயணம் செய்வது தொடர்ந்து வருகிறது. தற்போது அது தொடர்பான வீடியோ வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

வாகனங்கள் மேம்பாலத்தில் பல்வேறு இடங்களில் ஓவர் டேக் செய்ய தடை விதிக்கப்பட்டுள்ள பகுதியில் அத்துமீறி குறிப்பாக இரட்டை மஞ்சள் கோட்டை தாண்டி ஓவர் டேக் செய்து அதிவேகமாக பயணிக்கும் அரசு போக்குவரத்து கழக பேருந்துகளால் மீண்டும் விபத்து ஏற்பட வாய்ப்புகள் உள்ளதாக கூறப்படுகிறது.

அரசு போக்குவரத்து கழக பேருந்துகளின் ஓட்டுநர்கள் மீது போக்குவரத்து விதிமீறல் வழக்குகள் குமரி மாவட்டத்தில் இதுவரைபதியப்படவில்லை என்பதும் அதனால் இது போன்ற அத்துமீறல்கள் தொடர்ந்து வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆகவே சட்டம் அனைவருக்கும் சமம் என்பதை நிலைநாட்டும் பொருட்டு மார்த்தாண்டம் மேம்பாலத்தில் அத்துமீறி போக்குவரத்து விதி மீறல்களில் ஈடுபடும் அரசு போக்குவரத்து கழக பேருந்து ஓட்டுநர்கள் மீதும் காவல் துறை பாரபட்சமற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.




# தஞ்சாவூர் நீதிமன்றங்களில் சமரச நாள் விழா

தஞ்சாவூர்ஏப்ரல் 19

தஞ்சாவூர் மாவட்ட நீதி மன்றங்களி ல் மாவட்ட சமரச மையம் சார்பில் சமரச நாள் விழா நடை பெற்றது

தஞ்சாவூர் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் விழாவை சமரச மையத்தின் மாவட்ட ஒருங்கி ணைப்பாளரும் ,முதன்மை மாவட்ட நீதிபதியுமான பி. வேல்முருகன் தொடங்கி வைத்து பேசியதாவது

அனைத்து மாவட்ட நீதிமன்ற ங்களிலும் சமரசமையம் சென்னை உயர் நீதி மன்றத்தால் ஏற்படுத்தப் பட்டுள்ளது. வழக்குத்தரப்பினர் தங்களுடைய முரண்பாடுகளை நேரடியாக பயிற்சி பெற்ற சமரசர் கள் முன்னிலையில்பேசி சுமூக மான தீர்வு காண்பதற்காக இந்த மையம் அமைக்கப் பட்டுள்ளது இந்த சேவைக்கு எந்தவித கூடுதல் கட்டணமும் செலுத்தத் தேவையில் லை சமரசம் காணும் வழக்குகளில் செலுத்தப்பட்ட நீதிமன்றக்கட்டண ங்கள் திருப்பிவழங்கப்படுகின்றன சமரசமாக பேசி முடிக்கப்படும். வழக்குகளுக்கு மேல்முறையீடு இல்லை. சமரச முடிவுகளில் காத்திருப்பு நேரங்களும் ,பொருள் செலவுகளும் மீதப்படுகின்றன. வழக்குரைஞர்கள் நிலுவையிலு ள்ள தங்களது வழக்குகளை சமரச மையத்துக்கு அனுப்பி தீர்வு காண முன்வர வேண்டும் என்றார்.

நிகழ்வில் நீதிபதிகள் , வழக்குரை ஞர் சங்க உறுப்பினர்கள், சமரசர்க ள் உள்ளிட்டோர் கலந்து கொண்ட னர்.

# குமரி மாவட்டத்தில் செயல்படாத காவல் நிலைய தொலைபேசிகள்: நடவடிக்கை எடுப்பாரா எஸ்பி?



குமரி, ஏப். 19

குமரி மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான காவல் நிலையங்களில் லேண்ட்லைன் தொலைபேசிகள் செயல்படாமல் முடக்கத்தில் உள்ளது. முன்பு ஒரு குற்ற சம்பவம் நடைபெற்றால் அதன் தகவலை தெரிவிக்க அந்தப் பகுதியில் உள்ள காவல் நிலையத்தை தொடர்பு கொள்ள லேண்ட்லைன் தொலைபேசியை எளிதில் தொடர்பு கொள்ள முடிந்தது ஆனால் தற்போது ஒரு குறிப்பிட்ட காவல் நிலையங்களில் மட்டுமே லேண்ட் லைன் போன் செயல்பாட்டில் உள்ளது.

சில குறிப்பிட்ட காவல் நிலையங்களில் லேண்ட்லைன்போன் இணைப்புதுண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் தங்கள் பகுதியில் நடைபெறும் அசம்பாவிதங்கள் குறித்தும், புகார்கள் குறித்தும், காவலர்களை உதவிக்கு தொடர்பு கொள்ளவும் முடிவதில்லை என பரவலான குற்றச்சாட்டுகள் உள்ளது.

இரவு நேர பாதுகாப்பு ரோந்து காவலர்களில் தொலைபேசி எண்கள் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து தினந்தோறும் வெளியிடப்பட்டு வருகிறது. இதனை பத்திரிகையாளர்கள் தினசரி நாளிதழ்களில் , சமூக வலைத்தளங்களில் வெளியிட்டு ஒவ்வொரு கடைக்கோடி மக்களுக்கும் சென்றடைய செய்து வருகின்றனர்.

இது இரவு நேர பெண்கள் பாதுகாப்பிற்கும், பொது அச்சுறுத்தல்களுக்கும், குற்ற சம்பவங்கள் நடைபெறாமலும் இருக்க பெரிதும் உதவுகிறது. இரவு நேர ரோந்து தொலைபேசி எண் பொதுமக்களிடம் நல்ல வரவேற்பை பெற்று உள்ளது.

ஆனால் பகல் நேரங்களில் ஒரு அசம்பாவிதம் நடைபெற்றாலோ, அல்லது நடைபெறுவதாக இருந்தாலோ, உடனே அப்பகுதியில் உள்ள காவல் நிலையங்களை பெரும்பாலும் தொடர்பு கொள்ள முடியாத நிலை உள்ளது.

அனைத்து காவல் நிலையங்களிலும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் லேண்ட்லைன் போன் நம்பர் எழுதிப் போடப்பட்டுள்ளது.

இன்று அனைத்து பொதுமக்கள் கையிலும் செல்போன் உள்ளது எனவே பொதுமக்கள் தங்கள் பகுதியில் உள்ள காவல் நிலையங்களின் தொலைபேசி எண்ணை பதிவு செய்து வைத்துள்ளனர். மேலும் தங்கள் பகுதியில் உள்ள ஆய்வாளர்,உதவி ஆய்வாளர், காவலர்கள் போன்றவர்களின் எண்களையும் பெற்று பதிவு செய்து வைத்துள்ளனர்ஆனால்ஒருகாவல்நிலையத்தில் ஆய்வாளர் ,

உதவியாளர் காவலர் போன்றவர்கள் நிரந்தரமாக இருப்பதில்லை அவர்கள் வேறு காவல் நிலையத்திற்கு மாற்றலாகி செல்லும்போது அவர்கள் பணியாற்றிய இடத்தில் வேறு புதிய நபர்கள் பணி அமர்த்தப்படுவார்கள்.

இந்த சமயம் அந்தப் பகுதியில் ஒரு குற்ற சம்பவம் நடைபெற்றால் உடனே தங்களிடம் உள்ள காவலரின் எண்ணை தொடர்பு கொண்டால் அவர் நான் தற்போது மாற்றலாகி வந்து விட்டேன் எனவே நீங்கள் அந்த காவல் நிலையத்திற்கு சென்று புகார் அளியுங்கள் என கூறி விடுகிறார்கள்.

இதனால் சில குற்ற சம்பவங்கள் நடந்து விடுகின்றது.

சில பொதுமக்கள் அவசர தேவைக்காக 100 ஐ அழைக்கும் போது காலதாமதம் ஏற்படுவதாகவும்பொதுவாகஒருகுற்றச்சாட்டு உண்டு அதேபோல் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் செயல்படும் கட்டுப்பாட்டு அறை என்னை தொடர்பு கொண்டு அவசர உதவி கேட்டால் அவர்கள் சம்பந்தப்பட்ட காவல் நிலைய அதிகாரிகளை தொடர்பு கொண்டு சம்பவ இடத்திற்கு காவலர்கள் வந்து சேரும்போது அங்கு சில குற்ற சம்பவங்கள் அரங்கேரி முடிந்து விடுகிறது. அதன்பின் காவலர்கள் வந்தும் எந்த பிரயோஜனமும் இல்லை எனவும் பொதுமக்கள் குற்றச்சாட்டாக உள்ளது. காவல் நிலையங்களில் தொலைபேசி என்பது அத்தியாவசியமான, மிக முக்கியமான தொடர்புக் கருவியாகும். பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் குற்றத் தடுப்பில் இது முக்கிய பங்கு வகிக்கிறது. பொதுமக்கள் தங்களுடைய சந்தேகங்கள், தகவல்கள் மற்றும் புகார்களைப் பகிர்ந்து கொள்ள எளிதான வழியாக தொலைபேசி உள்ளது. அதேபோல் அனைத்து காவல் நிலையங்களிலும் 24 மணி நேரமும் செயல்படும் CUG எண்கள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும், இதனால் பொதுமக்கள் எந்த நேரத்திலும் தொடர்பு கொள்ள முடியும்.

குற்றச் செயல்கள், விபத்துக்கள் அல்லது ஆபத்தான நேரங்களில், பொதுமக்கள் உடனடியாக 100 அல்லது உள்ளூர் காவல் நிலைய எண்ணை அழைத்து உதவி பெற தொலைபேசி உதவுகிறது.

நேரில்செல்லமுடியாதசூழ்நிலைகளில், தொலைபேசி மூலமாகவும், காவல் நிலைய லேண்ட்லைன் என்னை தொடர்பு கொள்ள இது பெரிதும் உதவுகிறது.

நாடு முழுவதும் 1,211 காவல்நிலையங்களில் அடிப்படை வசதியான தொலைபேசி வசதி கூட இல்லை என காவல்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் அறிக்கையில் தெரிவித்துள்ளது

2012ஆம் ஆண்டு கொடுக்கப்பட்ட அறிக்கையில், 296 காவல்நிலையங்களில் முற்றிலுமாக தொலைபேசி வசதி இல்லாமல் இருந்தது. தற்போது அது 1,211 காவல் நிலையங்கள் என உயர்ந்துள்ளன.

எனவே பொதுமக்கள் எளிதில் காவல் நிலையங்களை தொடர்பு கொள்ள முடக்கப்பட்ட லேண்ட்லைன் தொலைத்தொடர்புஎண்கள்மீண்டும்செயல்படமாவட்ட காவல் கண்காணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே பொதுமக்களின் ஒட்டுமொத்த கருத்தாக உள்ளது.

# மொழியால், உணர்வால் ஒன்றிணைவோம்.பா.ஜ.க., கூட்டணியை வீழ்த்துவோம்': மதியழகன் வேண்டுகோள்



கிருஷ்ணகிரி, ஏப். 19

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் சட்டசபை தொகுதிக்குட்பட்ட போச்சம்பள்ளி, மோட்டூர் சுற்று வட்டார கிராமங்களில், தி.மு.க., வேட்பாளர் மதியழகன் எம்.எல்.ஏ., பிரசாரம் மேற்கொண்டார். அப்போது, பொதுமக்களிடம் அவர் பேசியதாவது: காலை உணவுத்திட்டம், புதுமைப்பெண், தமிழ் புதல்வன், நான் முதல்வன், அன்புக்கரங்கள், தாயுமானவர், இன்னுயிர் காக்கும் –48, மக்களை தேடி மருத்துவம், மகளிர் உரிமைத் தொகை, விடியல் பயணம் என சொல்லிய மற்றும் சொல்லாத திட்டங்களை செய்து கொடுத்து குடும்பங்கள் தோறும் சென்றுள்ளது, தி.மு.க., அரசு. ஆனால், தமிழகத்தின் நலனில் அக்கறையில்லாமல் மத்திய, பா.ஜ., அரசிடம் கட்சியை அடகு வைத்து, மக்களையும் அடகு வைக்க பார்ப்பது, அ.தி.மு.க., இதை மக்கள் புரிந்து கொண்டு ஓட்டளிக்க வேண்டும். மக்கள் நலனில், வளர்ச்சியில் அக்கறை காட்டும், தி.மு.க.,வை, 200 இடங்களுக்கு மேல் வெற்றி பெற வைக்க வேண்டும் . இவ்வாறு அவர் பேசினார்.

முன்னதாக கிருஷ்ணகிரி ரவுண்டானாவில் மத்திய அரசு கொண்டு வந்த தொகுதி மறுவரையறை மசோதா தோல்வியடைந்ததை கொண்டாடும் வகையில் பட்டாசு வெடித்தும் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கியும் தி.மு.க., வினர் கொண்டாடினர்.

இதில், மதியழகன் எம்.எல்.ஏ., பேசியதாவது: தமிழகம், ஆந்திரம், கர்நாடகம், கேரளா மாநிலங்களில், லோக்சபா தொகுதிகளை பெயரளவிற்கு உயர்த்தி, ஹிந்தி பேசும் வட மாநிலங்களில் அதிக லோக்சபா தொகுதியை உயர்த்தி, தென்மாநிலங்களை புறந்தள்ளும் மத்திய, பா.ஜ., அரசின் முயற்சி தோல்வியடைந்துள்ளது. இதுதான் நமது முதல் படி. சட்டசபை தேர்தலில் வெற்றி பெறுவது நமது அடுத்த படி என நினைத்து அனைவரும் உழைக்க வேண்டும். மொழியால், உணர்வால் ஒன்றிணைவோம், பா.ஜ., கூட்டணியை வீழ்த்தி, தமிழகத்தில் மீண்டும் முதல்வராக ஸ்டாலினை அமர வைக்க பாடுபடுவோம்.

இவ்வாறு அவர் பேசினார். கிருஷ்ணகிரி, தி.மு.க., நகர பொறுப்பாளர்கள் அஸ்லம், வேலுமணி, கவுன்சிலர்கள், தி.மு.க., நிர்வாகிகள் உடனிருந்தனர்.



வாணியம்பாடி 1வது வார்டு சவுக்குதோப்பு பகுதியில் த.வெ.க.வினர் வாக்கு சேகரிக்க சென்ற போது இந்தப்பகுதியில் அனுமதிப்பெறவில்லை எனக்கூறி காவல்துறையினர் தடுத்து நிறுத்தியதால் பரபரப்பு ஏற்பட்டது

## தேர்தல் விதிமுறை மீறல்

# நாம் தமிழர் கட்சி, தவெக வேட்பாளர் மீது வழக்கு

நாகர்கோவில், ஏப்.19

குமரியில் தேர்தல் பிரச்சார விதிமுறை மீறல் சம்பந்தமாக நாம் தமிழர் கட்சி மற்றும் தவெக வேட்பாளர்கள் மீது போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

கிள்ளியூர் சட்டமன்ற தொகுதி த வெக வேட்பாளராக சபின் என்பவர் போட்டியிடுகிறார். இவருக்கு ஆதரவாக கொல்லங்கோடு பகுதியில் வாகன பிரச்சாரம் நடந்தது. இதற்காக தேர்தல் நடத்தும் அ தி கா ரி யி ட ம் விண்ணப்பித்ததற்கு அதிகமாக இருசக்கர வாகனங்கள் மற்றும் பொதுமக்களை திரட்டி போக்கு வரத்து இடையூறு ஏற்படுத்தி உள்ளனர். இது குறித்து தேர்தல் கண்காணிப்பாளர் அலுவலர் ஹரிஷ் குமார (33 ) என்பவரின் புகாரின் பேரில் வேட்பாளர் சபின் மீது கொல்லங்கோடு போலீசார் வழக்கு பதிவு செய்தனர்.

இதே போல் பத்மநாபபுரம் தெ வெக வேட்பாளர் கிருஷ்ணகுமார் என்பவர் மணலிக்கரை சந்திப்பில் இரு சக்கர வாகன பிரச்சாரத்திற்கு அனுமதி கேட்டு, அதிக அளவில் பைக்குகள் மற்றும் பொதுமக்களை கூட்டி விதிமுறைகளை மீறியதாக கொற்றிகோடு போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதி நாம் தமிழர் கட்சி வேட்பாளர் மரியஜனிஃபர் அந்த தொகுதியில் தீவிர பிரச்சாரத்தின் போது விதிமுறைகளை மீறி ஆட்டோ மற்றும் நான்கு சக்கர வாகனங்களில் கட்சி கொடி கட்டி பிரச்சாரம் செய்துள்ளதாக அவர் மீது கன்னியாகுமரி போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

## நாகர்கோவிலில்

# புறநகர் பஸ் நிலையம் அமைக்கப்படும் பாஜ வேட்பாளர் எம் ஆர் காந்தி பிரச்சாரம்



நாகர்கோவில், ஏப். 19

நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி பாரதிய ஜனதா கட்சி வேட்பாளர் எம் ஆர் காந்தி எம்எல்ஏ நேற்று பட்டகசாலியன் விளையில் இருந்து காலையில் பிரச்சாரத்தை தொடங்கினார். அப்போது அவருடன் பாரதிய ஜனதா மற்றும் அதிமுக கூட்டணி கட்சியினர் அவருக்கு வரவேற்பு அளித்தனர். தொடர்ந்து பிரச்சாரத்தில் கலந்து கொண்ட எம் ஆர் காந்தி எம்எல்ஏ பேசியதாவது:

தமிழ்நாட்டில் பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகள் நடைபெற பாரதிய ஜனதா அதிமுக கூட்டணிக்கு வாக்களிக்க வேண்டும். நாகர்கோவில் சட்டமன்ற தொகுதியை பிரதமர் நேரடியாக கண்காணிக்கிறார். இந்த தொகுதியை முன்மாதிரி தொகுதியாக மாற்ற வேண்டும் என்றால் மீண்டும் தாமரை வெற்றி பெறச் செய்ய நீங்கள் அனைவரும் எனக்கு ஆதரவு தாருங்கள். உங்கள் வாக்குகளை தாமரை சின்னத்திற்கு அளித்து அதிகப்படியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்ய வேண்டும் என்று உங்களை கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 5 ஆண்டுகளாக இந்த தொகுதி எம்எல்ஏ வாக இருந்து அனைத்து பகுதிகளுக்கும் சென்றிருக்கிறேன். எந்த நேரத்திலும் மக்கள் என்னை வந்து சந்திக்கலாம் என்பது அனைவருக்கும் தெரியும். மாணவர்களுக்கு கல்வி கடன் பிரச்சனை உள்ளிட்ட பல பிரச்சனைகளுக்கு ஓடோடி சென்று குரல் கொடுத்தவன் நான். இந்த தொகுதியில் ஐடி பார்க் வேண்டும் என்று சட்டமன்றத்தில் பேசி முதல் அமைச்சரின் கவனத்திற்கு இதை கொண்டு சென்று, தற்போது ஐடி பார்க் கட்ட அனுமதி அளிக்கப்பட்டு அந்த பணிகள் நடந்து வருகின்றன.

மேலும் கூடுதலாக வேலை வாய்ப்பு இந்த தொகுதியில் உருவாக்க வேண்டும். அதற்காக பாரதி ஜனதா அதிமுக கூட்டணிக்கு வாக்குகளை தாருங்கள். பிரதமரின் வீடு கட்டும் திட்டம், மருத்துவ காப்பீடு திட்டம், ஜல் ஜீவன் போன்ற திட்டங்களால் எண்ணற்ற பயனாளிகள் பயனடைந்துள்ளனர். நாகர்கோவில் தொகுதியில் போக்குவரத்து பிரச்சனை உள்ளது. இந்த பிரச்சனைக்கு தீர்வு காண மாற்றுத்திட்டங்கள் கொண்டுவர வேண்டும். நாகர்கோவிலில் புற நகரில் பஸ் நிலையம் அமைக்கப் பட வேண்டும். இதற்கான நடவடிக்கை நிச்சயம் எடுப்பேன். யாருக்கும் எந்த பாதிப்பும் இல்லாத வகையில் பஸ் நிலைய பணிகள் அமைக்கப்படும். ரயில் நிலையத்திலிருந்து எளிதில் பஸ நிலையம் வந்து செல்ல புதிய புதிய பஸ் வசதி செய்யப்படும். வலம்புரி விளை குப்பை கிடங்கு பிரச்சினை குறித்து தொடர்ந்து பேசி வந்துள்ளேன். இந்த தொகுதி முழு வளர்ச்சி பெற தாமரைக்கு வாக்குகளை தாருங்கள். இவ்வாறு அவர் பேசினார்.

**FORMAT C-1**

**(forcandidatetopublishinNewspapers,TV)**

**DeclarationaboutCriminal Cases**

( As per the judgement dated 25th september, 2018, of Hon'ble Superme Court in WP(Civil) No. 536 of 2011( Publish Interest Foundation & Ors, Vs, Union of India & Anr)

NameandAddressofCandidate::B.Sheik bareeth,
S/O.Babu,No:39,Asathstreet,asanathpuram,
DindigulWest,Dindigul- 624002.

NameofPoliticalParty : TamilagaValvurimaiKatchi

Name of Election : TAMILNADU LEGISLATIVE ASSEMBLYGENERALELECTION-2026

NameofConstituency : 132 DINDIGUL

IS.ALEX(Nameofcandidate),acandidatefortheabovementionedelection,declareforpublic information the following details about my criminal antecedents

(A)PendingCriminalCases

| S.No | Name of court | Case No. And Dated | Statusof case (S) | Section(s) of Acts concerned and brief description of offence(s) |
|---|---|---|---|---|
| 1 | Nil | Crimeno: 0060/2022 | REFERRED | IPC143,341(TOWNSOUTHPS DINDIGUL) |
| 2 | Nil | Crimeno: 0623/2018 | REFERRED | CRPC151,(TOWNNORTHPS DINDIGUL) |
| 3 | Nil | Crimeno: 0160/2022 | PENDINGTRIAL | IPC143,283,341 (TOWNNORTHPSDINDIGUL) |
| 4 | Nil | Crimeno: 0145/2022 | REFERRED | CRPC151, (TOWNSOUTHPSDINDIGUL) |
| 5 | Nil | Crimeno: 0130/2022 | PENDINGTRIAL | IPC143,283,341 (TOWNNORTHPSDINDIGUL) |
| 6 | Nil | Crimeno: 0401/2024 | PENDINGTRIAL | IPC294(B),324,506(2),(TOWN NORTHPS DINDIGUL) |

**(B)Detailsaboutcasesofconvictionforcriminaloffences**

| S.No | NameofCourt& date(s)oforders(s) | Descriptionofoffence(s)& Punishmentimposed | Maximum Punishmentimposed |
|---|---|---|---|
| 1 | Nil | Nil | Nil |
| 2 | Nil | Nil | Nil |
| 3 | Nil | Nil | Nil |

*In the case of election to council of states or election to Legislative Council by MLAs, mention the election concerned in place of name of constituency.

Note:

(i) The Particulars regarding criminalcases pending against thecandidate shall be in boldletters.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.